மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாள் திங்கள்கிழமை.

அசல் வழக்கு எண்.11/2020

--------

GMJ பேப்பர் & போர்ட்ஸ்,
சாமிநாதபுரம், பழனி தாலூக்கா,
அதற்காக அதன் டைரக்டர்
ஜோக்கப் மேத்யூ. .. வாதி

/எதிர்/

ஜெயமணி,
மாவட்ட செயலாளர்,
திண்டுக்கர் மாவட்ட பேப்பர்
மில் தொழிலாளர் சங்கம் AITUC,
திண்டுக்கல்
(தனக்காகவும், மேற்படி திண்டுக்கல் மாவட்ட
பேப்பர் மில் தொழிலாளர்களுக்காகவும்) .. பிரதிவாதி

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் கே.வெங்கட்ராமன் மற்றும் எம்.உதயக்குமார் ஆகியோர் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.எம்.சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், இன்று இவ்வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

பிரதிவாதியோ, அவரது தொழில் சங்கத்தை சார்ந்த பணியாளர்களோ வாதி நிறுவனத்தின் நிர்வாகத்தையும், வாதியின் நிறுவனம் இயங்குவதையும் தடை செய்யவோ, வாதியின் நிறுவனத்தில் வேலை

செய்ய விரும்பும் தொழிலாளர்களை வேலைக்கு செல்ல விடாமல் தடுத்து நிறுத்தவோ, வாதியின் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாதி மில்லில் இருந்து வெளியில் செல்வதையோ, வாதியின் மில்லுக்கு மூலப்பொருட்கள் கொண்டு வரும் வாகனங்களை உள்ளே விடாமல் தடுக்கவோ கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதியை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்று இவ்வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. வாதி அழைக்கப்பட்டு ஆஜராகவில்லை. எனவே, இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 20.03.2023 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.03.20 17:12:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.